INDIA TODAY 10 OCT 2007

## என்ன சேதி

எச்.கே.ராஜசேகர்



ஈஷா கிராமோத்சவத்தில் கரகாட்டம்

# இணைக்கும் யோகா

**சென்னை:** இந்தியாவின் இதயம் கிராமப்புறங்களில்தான் இருக்கிறது என்றார் காந்தி. அந்த இதயத்திலுள்ள அடைப்புகளை திறந்து விடும் சேவையை செய்து வரும் ஈஷா அறக்கட்டளையின் கிராமோத்சவமும் மகா சத்சங்கும் சுடந்த வாரம் சென்னையில் மகா ஆரவாரமாக நடந்தது. சுய ஆர்வத்தால் மெகா அரசியல் மாநாடுகளைவிட பெரிய கூட்டம் இந்த விழாவுக்கு கூடியது. "ஒரு கட்சியால்கூட கூட்ட முடியாத மக்கள் வெள்ளம் இது" என அவ்விழாவில் கலந்துகொண்ட முதல்வர் மு.கருணாநிதி பாராட்டினார். அந்த ஒரு நாள் விழாவுக்கு சுமார் 4 லட்சம் பேர் வந்திருந்தார்கள். கரகாட்டம், கபடி, உறியடித்தல் போன்ற பல கிராமப்புற விளையாட்டுகள் நிகழ்த்தப்பட்டன. ஈஷா அறக்கட்டளையின் நிறுவனர் சத்குரு ஜக்கி வாசுதேவின் மகா சத்சங்கும் நடந்தது. அது போக 2.5 கோடி மரங்கள் நடும் மாபெரும் சுற்றுச்சூழல் இயக்கத்தை தொடங்கி வைத்தார் கருணாநிதி. 25 ஆண்டுகளாக யோகாவை முன்னிறுத்தி வரும் ஜக்கி வாசுதேவ், மக்களின் உடல், மனம், உணர்வு, சக்தி ஆகிய எல்லாமும் முக்கியம் என கருதுபவர். அதனால் தேசத்தின் 70 சதவீத ஜனத்தொகை வசிக்கும் கிராமங்களுக்கு புத்துயிர் தர கிராம புத்துணர்வு இயக்கம், சுற்றுச்சூழலை அழிவிலிருந்து காக்க பசுமைக் கரங்கள் திட்டம், ஆன்மீக தேடல் மூலம் ஒவ்வொருவரும் தத்தமது வாழ்க்கையை கண்டெடுக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டங்களை முன்னெடுத்துச் செல்கிறார் அவர். நம்பிக்கைகளில் முடங்கிக் கிடக்கும் மதங்கள் மக்களை பிரிக்கும். வாழ்க்கை குறித்த தேடலை தூண்டும் ஆன்மீகம் மக்களை இணைக்கும். ஜாதி, மத பேதங்களற்ற ஈஷா யோகாவைப் போல.

**எஸ்.செந்தில் குமார்**

DINAKARAN 24 SEP 2007



ஈஷா யோகா மையத்தின் 25ம் ஆண்டு விழாவை முன்னிட்டு, 'ஈஷா கிராமோத்சவம்' என்ற பெயரில், 2.50 கோடி மரங்கள் நடும் திட்டத் தொடக்க விழா, சென்னை அண்ணா பல்கலைக்கழக மைதானத்தில் நேற்று நடந்தது. விழாவில் பங்கேற்ற முதல்வர் கருணாநிதிக்கு நினைவுப் பரிசு வழங்குகிறார் சத்குரு ஜக்கி வாசுதேவ்.

### விளம்பரப் பலகைகளை அகற்ற

# தடை உத்தரவு வழங்க நீதிமன்றம் கவலைப்பட வேண்டும்

## ஈஷா மைய விழாவில் கருணாநிதி பேச்சு

சென்னை, செப்.24: விளம்பரப் பலகைகளை அகற்ற தடை ஆணை வழங்குவதற்கு நீதிமன்றங்கள் கவலைப்பட வேண்டும் என்று முதல்வர் கருணாநிதி கூறினார்.

ஈஷா யோகா மையத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு, 'ஈஷா கிராமோத்சவம்' நிகழ்ச்சி, அண்ணாப் ப்ல்கலைக்கழக வளாகத்தில் நேற்று நடந்தது. கனிமொழி எம்.பி. கலந்து கொண்டு, இரண்டரை கோடி மரங்கள் நடுவதற்கான பசுமைக் கரங்கள் திட்டத்தை தொடங்கி வைத்தார். முதல்வர் கருணாநிதி மரக்கன்று நட்டார். பின்னர், அவர் பேசியதாவது:

மரம் நடும் நிகழ்ச்சிகள் பலநேரங்களில் நடந்து அதில் கலந்து கொள்ளும் வாய்ப்பை பெற்று இருக்கிறேன். அதற்கு எல்லாம் சிகரம் வைப்பது போல சத்குருவின் முயற்சியும், கார்த்திகேயனின் அரிய உழைப்பினாலும் பட்டி தொட்டிகள், கிராமங்கள் என்று பல இடங்களில் இருந்து மக்கள் வந்திருப்பதை பார்க்கும்போது, மரம் நடும் பணியில் மக்கள் தங்களது மனதை பறிகொடுத்து இருப்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது.

சத்குரு மக்களிடம் எடுத்து வைக்கும் வாதங்களும், அருள்மொழிகளும் பட்டி, தொட்டிகளில் உள்ள மக்களையும் கவர்ந்துள்ளதை உணரமுடிகிறது. எத்தனையோ துறவிகள் இருக்கிறார்கள். இப்படி ஒரு துறவி இருந்தால், இந்த நாடு என்ன, எந்த நாடும் பெரிய அளவில் வளர்ந்திருக்கும் என்று நினைத்து பெருமூச்சு விடுகிறேன். இந்து மதத்தின் பெரும் துறவியான குன்றக்குடி அடிகளாரிடம் எனக்கு அன்பு உண்டு. அதற்கு காரணம், அவர் தமிழை வளர்த்தார். இப்போது இளைய மடாதிபதியாக இருக்கும் குன்றக்குடி அடிகளாரும் தமிழை வளர்ப்பதால் அவருடனும் எனக்கு தொடர்பு உண்டு.

சத்குரு, மதத்தை வளர்க்கவில்லை. மரத்தை வளர்ப்பதால் அவருடன் அன்பு உண்டு. மதத்தை வளர்த்தால், தலையை கொண்டு வா, கையை கொண்டு வா, நாக்கை கொண்டு வா என்றுதான் சொல்லத் தோன்றும். மரத்தை வளர்த்தால் மக்களை வாழ வைக்க பயன்படும் என்ற நல்லுரையை அவர்களுக்கு வழங்கிட முடியும். அதைத்தான் சத்குரு செய்கிறார்.

இவரா இவ்வளவு பெரிய கூட்டத்தை கூட்டி இருக்கிறார் என்று மலைத்து போகிறேன். மனம் மகிழ்கிறேன். நாடு வாழ, நலிவு தீர மரம் நடுவது, இன்று சாதாரணமாக தோன்றும், பிறகு அது பெரிதாக தெரியும். மரம் நடுவதை துறவிகள் செய்கிறார்கள். முன்பு எல்லாம் மரங்கள் நடுவதை அரசுதான் செய்யும். அசோகர், அக்பர் எல்லாம் மரங்களை நட்டார்கள். மன்னர்கள் காலத்தில் மரங்களை வளர்ப்பது சர்வசாதாரணம். மக்கள் ஆட்சியில் மரங்களை நடுவதற்காக மரம் நடும் வாரம் கொண்டாப்படுகிறது.

மரம் நடுவதில் காட்டப்படும் ஆர்வத்தை வளர்ப்பதில் காட்டுவதில்லை. ஒவ்வொருவரும் மரம் நடுவதில் ஆர்வம் காட்ட வேண்டும். அந்த பெரும் பொறுப்புணர்வு சத்குரு பெற்று இருக்கிறார். மரத்தை நாம் வளர்த்தால் மரம் நம்மை வளர்க்கும் என்று நான் ஒரு முறை சொல்லி அதுகுறித்தும் விளக்கி இருக்கிறேன்.

டெல்லி, பெங்களூரில் சாலையோரங்களில் மரங்கள் இருப்பதை போல சென்னையும் என்று என்னால் சொல்ல முடியவில்லை. மரங்களுக்கு பதிலாக பெரிய பேனர்கள், பட விளம்பரங்கள், அரசு விளம்பரங்கள் என்று வைக்கிறோம். இது வாரக் கணக்கில், மாதக் கணக்கில், ஆண்டுமுழுவதும் வைக்கிறோம். இதனால், மரங்கள் வளர்வதற்கு வழியில்லை. மரம் வளரும் தன்மையும் பறிக்கப்படுகிறது. எதிர்காலத்தில் சென்னை மாநகரத்தில் மரங்கள் இருக்க வேண்டும். இதற்கு நான் மட்டும் கவலைப்பட்டால் போதாது, அதிகாரிகள் கவலைப்பட்டால் போதாது. சிப்பந்திகள் கவலைப்பட வேண்டும். விளம்பரப் போர்டு வைப்பவர்கள் கவலைப்பட வேண்டும். அதை அகற்றாமல் நீதிமன்றத் தடையாணை வாங்க செல்பவர்கள் கவலைப்பட வேண்டும். தடையாணை அளிக்கும் நீதிமன்றங்கள் கவலைப்பட வேண்டும். மரங்கள் வளர்ந்தால்தான் மனிதர்கள் வாழமுடியும்.

இவ்வாறு முதல்வர் கருணாநிதி பேசினார்.

விழாவில், முதல்வர் கருணாநிதிக்கு நினைவுப் பரிசை சத்குரு வழங்கினார். காட்டுப் பூ என்ற இதழை கனிமொழி வெளியிட்டார். அதை சுதாரகுநாதன் பெற்றுக்கொண்டார். நிகழ்ச்சியில், சிபிஐ முன்னாள் இயக்குனர் டி..ஆர்.கார்த்திகேயன், அமைச்சர்கள் எ.வ.வேலு, பரிதி இளம்வழுதி, சாமிநாதன், கே.பி.கே.குமரன், மேயர் மா.சுப்பிரமணியன் உட்பட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். விளையாட்டு போட்டியில் வெற்றிபெற்ற குழுவினருக்கு முதல்வர் பரிசுகளை வழங்கினார்.

# கிராமிய விளையாட்டு போட்டிகள்



ஈஷா அமைப்பு சார்பில் சென்னை அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் கிராமிய விழா நடந்தது. அப்போது வயல்வரப்பின் மீது நடக்கும் போட்டி.



சிலம்பத்தின் மூலம் 5 பேரை சமாளிக்கும் வீராங்கனை.



உணவுத் திரு விழாவில் விற்கப்பட்ட உணவு பொருட்களை பொது மக்கள் ஆர்வமாக வாங்கிய காட்சி.



கிராமிய கலை விளையாட்டு போட்டி களில் ஒன்றான இரு கைகளில் இரண்டு செங்கல்களை தூக்கும் போட்டியில் கலந்து கொண்ட பெண்.



ஈசா அமைப்பு சார்பில் சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நடந்த விழாவில் முதல்-அமைச்சர் கருணாநிதி பேசிய போது எடுத்த படம். அருகில் ஈசா மைய தலைவர் ஜகி வாசுதேவ், கனிமொழி எம்.பி., சி.பி.ஐ. முன்னாள் அதிகாரி கார்த்திகேயன், கர்நாடக இசைப்பாடகி சுதா ரகுநாதன், ஆகியோர் உள்ளனர்.



கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் ஒரு பகுதியை படத்தில் காணலாம்.

# ‘மதம் வளர்க்காமல் மரம் வளருங்கள்’

## கருணாநிதி வேண்டுகோள்

சென்னை, செப். 24- மதம் வளர்க்காமல் மரம் வளருங்கள் என்று முதல்-அமைச்சர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### மரக்கன்று நடும் திட்டம்

சென்னையில் உள்ள அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் ஈசா கிராமோத்சவம் அமைப்பின் பசுமை திட்டம் சார்பில் 2½ கோடி மரக்கன்றுகள் நடும் திட்டத்தின் தொடக்க விழா நேற்று நடைபெற்றது விழாவுக்கு முதல்-அமைச்சர் கருணாநிதி தலைமை தாங்கி மரக்கன்றை நட்டு திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்த விழாவுக்கு ஈசா மைய தலைவர் ஜகிவாசுதேவ் சுவாமி முன்னிலை வகித்தார்.



விழாவில் முதல்-அமைச்சர் கருணாநிதி 2½ கோடி மரங்கள் நடும் திட்டத்தை தொடங்கி வைத்தார். அருகில் கவிஞர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அமைச்சர் வேலு. சத்குருஜகி வாசுதேவ் சுவாமிகள் ஆகியோர் உள்ளனர்.

விழாவில் கருணாநிதி பேசியதாவது:-

### என்னை கவர்ந்த துறவி

பெருமதிப்பிற்குரிய அருட்திரு சத்குரு அவர்களின் முயற்சியும், அவர்களின் வார்த்தைகளும் அவர் மக்கள்பால் எடுத்து வைக்கின்ற வாதங்களும், அவர் மணிப்பிரவாளமாக, அருவியாக வழிவிடுகின்ற அருள் மொழிகளும் எந்த அளவிற்கு- சில பட்டிணங்களிலே மாத்திரம் மட்டும் அல்லாமல், பட்டி தொட்டிகளிலே உள்ள மக்களையும் கவர்ந்திருக்கிறது என்பதை என்னால் உணர முடிகிறது.

நான் அவர்களையும், உங்களையும் நோக்குகின்ற நேரத்தில் துறவிகளாக இருப்பவர்கள் எல்லாம் இப்படி இருந்தால் இந்த நாடு, இந்த உலகம் எந்த அளவிற்கு முன்னேறும், எந்த அளவிற்கு உயர்ந்து நிற்கும் என்று, எண்ணி பெருமூச்சு விடுகிறேன்.

### குன்றக்குடி அடிகளார்

நான் துறவிகளிடம் கொண்டுள்ள பற்று, பாசம் எத்தகையது என்பதையும், எப்படிப்பட்ட துறவிகள் இடத்திலே பற்றும், பாசமும் கொண்டிருப்பேன் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்: உதாரணமாக சொல்ல வேண்டுமேயானால், நான் இந்து மதத்திலே பெரும் துறவியாக கருதப்படுகின்ற மறைந்த குன்றக்குடி அடிகளார் இடத்தில் எனக்கு மிகுந்த அன்பு உண்டு.

காரணம் அவரிடத்திலே குடிகொண்டிருந்த தமிழ் மீது- இப்போது இளைய தம்பிரான், இளைய மடாதிபதி குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரிடமும் அதே அன்பு தொடர்கிறது. காரணம் அவர்கள் தமிழ் வளர்ப்பதால்.

### மரம் வளர்ப்பதால்

நம்முடைய சத்குரு அவர்களிடம் அன்பு பெருக காரணம் அவர்கள் தமிழ் வளர்க்கிறார்கள், இவர்கள் மனிதர்களுக்கு தேவையான மரம் வளர்க்கிறார் என்பதுதான். மதத்தை வளர்க்காமல், மரத்தை வளர்ப்பவர்களை நான் பெரிதும் நம்புகிறவன்.

மதத்தை வளர்த்தால் தலையை கொண்டு வா, கையை கொண்டு வா, நாக்கை கொண்டு வா என்று சொல்லத் தோன்றும். மரத்தை வளர்த்தால் மக்களை வாழ வைக்க பயன்படும் என்ற நல்லுரையை அவர்களுக்கு வழங்கிட முடியும். அதைத்தான் நம்முடைய சத்குரு அவர்கள் செய்கிறார்கள். நான் அவரையும் பார்த்து, இந்த கூட்டத்தையும் நினைத்தால் ஏ.. அப்பா, இவரா இவ்வளவு பெரிய கூட்டத்தை கூட்டினார் என்று நான் மலைத்து போகிறேன்.

### பெரிய மாநாடு

நாங்கள் ஒரே நாளில் காட்ட முடியாத ஒரு பெரிய மாநாட்டை சத்குரு அவர்கள் இன்றைக்கு கூட்டி காட்டி இருக்கிறார் என்றால் நான் இனி தமிழ் நாட்டு மக்களுக்கெல்லாம் கொள்ளை லாபம், கொள்ளை அதிருஷ்டம் என்றுதான் நான் நம்பி மகிழ வேண்டியிருக்கிறது.

பழைய சரித்திர புத்தகங்களை, பால பாடங்களை எடுத்து இன்றைக்கு படித்து பார்த்தால் அசோகர் என்ன செய்தார்?. அக்பர் என்ன செய்தார்? என்றெல்லாம் அவர்கள் செய்த நன்மைகளை எடுத்து பார்க்கும் போது அசோகர் சாலை ஓரங்களில் எல்லாம் மரம் நட்டார் என்பது தான் பெரிதாக அந்த காலத்து சரித்திர புருஷர்களை பற்றி அவர்கள் செய்த சாதனைகளை பற்றி புத்தகங்களிலே இப்போதும் வெளியிடப்படுகின்ற செய்திகளை நாம் அறிகின்றோம்.

### ஒவ்வொருவருக்கும் பொறுப்பு

ஆக மன்னர் காலத்திலே கூட மரங்களை வளர்ப்பது சர்வ சாதாரணமாக இருந்திருக்கின்றது. மக்கள் ஆட்சி காலத்தில் அது மேலும் பெருகிட வேண்டும் என்ற எண்ணத்தினாலே தான் நமது இந்திய அரசு மரம் வளர்ப்பதற்கு ஒரு முக்கியத்துவத்தை தந்து மர வாரம் என்ற ஒரு வாரத்தையே உருவாக்கி அந்த வாரம் முழுவதும் மரம் நடுகின்ற வாரம் என்று, அந்த வாரம் முழுவதும் கொண்டாடப்பட்டது.

ஆனால் மரத்தை நடுகின்ற நேரத்திலே இருக்கின்ற ஆர்வம் அதை வளர்பதிலே காட்டுவதில்லை. ஆடு, மாடுகள் நாம் நட்ட மரங்களை சேதப்படுத்தாமல், அவைகளை அழித்துவிடாமல் பாதுகாக்கின்ற அந்த பணியையும் செய்யவேண்டி இருக்கின்ற காரணத்தால் தான் அரசாங்கமே இந்த பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது.

### விளம்பர பேனர்கள்

அரசாங்கத்தை மாத்திரம் அன்றி, அவர்களே இந்த காரியத்தை செய்வார்கள் என்று விட்டு விடாமல் ஒவ்வொருவருக்கும் ஒரு மரத்தை நட்டால் அதை வளர்த்து ஆளாக்கி விட்ட பெரும் பொறுப்பு இருக்கிறது என்பதை ஒவ்வொரு மனிதரும் உணரவேண்டும். அந்த பெரும் பொறுப்பை உணர்ந்தவர்களின் தலைவராகத்தான் நம்முடைய சத்குரு விளங்குகிறார் என்பதால் அவரை வாழ்க, வாழ்க என்று நான் வாழ்த்துகிறேன்.

சென்னை மாநகரத்தின் சாலைகளிலே மரங்களுக்கு பதிலாக பெரிய, பெரிய பேனர்களை வைக்கிறோம். பெரிய, பெரிய விளம்பரங்களை வைக்கிறோம். கோபுர உயரத்திற்கு இருக்கின்ற பட விளம்பரங்களை வைக்கின்றோம். மரங்கள் வளர்வதற்கு வழியில்லாமல், மரங்கள் இருக்கிறதா? இல்லையா? என்று தெரிந்து கொள்வதற்கும் வழியில்லாமல் மரங்களால் ஒரு நகரத்திற்கு ஏற்பட வேண்டிய எழில் குலுங்குகின்ற அந்த தன்மையும் இன்றைக்குப் பறிக்கப்பட்டு விடுகின்றது.

### மரத்தை பாதுகாக்க..

சென்னை மாநகரம் இனிமேலாவது எழிலோடு விளங்க வேண்டும் என்பதற்கு ஏற்ற வகையில் நான் கவலை பட்டால் மாத்திரம் போதாது, என்னுடைய அதிகாரிகளும் கவலைப்பட வேண்டும். அதிகாரிகள் கவலைப் பட்டால் மாத்திரம் போதாது. சிப்பந்திகளும் கவலைப்பட வேண்டும். சிப்பந்திகள் கவலைப் பட்டால் மாத்திரம் போதாது. நாங்கள் இங்கே விளம்பர போர்டுகளை வைத்துத்தான் தீருவோம் என்று நீதிமன்றத்திற்கு சென்று தடையாணை வாங்குகிறார்களே சில பேர், அவர்களும் கவலைப் பட வேண்டும். தடையாணை வாங்குபவர்களும் கவலைப்பட வேண்டும். தடையாணை கொடுக்கின்ற நீதிமன்றங்களும் கவலைப்பட வேண்டும்.

எல்லோரும் சேர்ந்து கவலைப் பட்டால் தான் மரங்களை வளர்க்க முடியும். மரங்கள் வளர்ந்தால் தான் மனித உயிர்கள் வாழும், மனித உயிர்கள் ஆரோக்கியமாக வாழ, நிம்மதியாக வாழ, சுகமாக வாழ, சுற்றுச் சூழலை பாதுகாத்துக் கொண்டு வாழ முடியும்.

இவ்வாறு முதல்-அமைச்சர் கருணாநிதி பேசினார்.

### கனிமொழி எம்.பி.

முன்னதாக கைப்பந்து போட்டியில் வெற்றி பெற்ற கடலூர் மாவட்டம் சங்கொலிக்குப்பம் குழுவினருக்கு கருணாநிதி பரிசு வழங்கினார். மேலும், எறிபந்து போட்டியில் வெற்றி பெற்ற தேவராயபுரம் குழுவினருக்கு பரிசு வழங்கினார்.

விழாவில் ‘ஈசா காட்டுப்பூ’ என்ற தமிழ் மாத இதழை கனிமொழி கருணாநிதி எம்.பி. வெளியிட்டார். அதை பாடகி சுதா ரகுநாதன் பெற்றுக் கொண்டார். விழாவில் முன்னாள் சி.பி.ஐ. இயக்குனர் டி.ஆர். கார்த்திகேயன், முத்தையா உள்பட பலர் பேசினார்கள்.

கோக்கோ கோலா பொது மேலாளர் சிவகுமார் மற்றும் ஜேக்ரோச் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

Dinamani 24 Sep 2007

# மரங்களை வளர்க்க வேண்டும், மதங்களை வளர்க்கக் கூடாது

**சென்னை, செப். 24:** "மரங்களை வளர்த்தால் நல்லது. மாறாக மதங்களை வளர்த்தால், தலையைக் கொண்டு வா, காலைக் கொண்டு வா என்று கேட்கத் தோன்றும்" என்று தமிழக முதல்வர் கருணாநிதி குறிப்பிட்டார்.

ஈஷா பவுண்டேஷன் வெள்ளி விழா, கிராமோத்சவம், இரண்டரை கோடி மரங்கள் நடும் விழா ஆகியவை அண்ணா பல்கலைக்கழகத் திடலில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

அந்த வளாகத்தில் 'நாகலிங்க மரத்தை' முதல்வர் கருணாநிதி நட்டார்.

அதன்பிறகு அவர் பேசியது:

சத்குரு ஜக்கி வாசுதேவ் தலைமையிலான ஈஷா அறக்கட்டளை நடத்தும் மரக்கன்று நடும் விழாவில் தொடர்ந்து பங்கேற்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது.

துறவியாக இருப்போர் இப்படியெல்லாம் இருந்தால், இந்த நாடு எந்த அளவுக்கு உயர்ந்திருக்கும் என்பதை நினைத்துப் பெருமூச்சு விடுகிறேன்.

நான் துறவிகளிடம் பற்றும் பாசமும் கொண்டவன்தான். எப்படிப்பட்ட துறவியர் என்றால், மறைந்த இந்து மதப் பெரியவர் குன்றக்குடி அடிகளார் மீது எனக்கு அன்பு உண்டு. அவரது தமிழின் மீது எனக்கு மரியாதை உண்டு. தற்போது இளைய தம்பிரானும் தமிழை வளர்ப்பதால் அவர் மீதும் எனக்கு அன்பு உண்டு.

அதைப் போல் சத்குரு ஜக்கி வாசுதேவ் மரங்களை நடுகிறார், சமூகசேவை ஆற்றுகிறார். அதனால், அவர் மீதும் எனக்குப் பற்றும் பாசமும் உண்டு.

மரத்தை வளர்த்தால், மக்களை வாழ வைக்க முடியும். மதங்களை வளர்த்தால், 'தலையைக் கொண்டு வா, காலைக் கொண்டு வா' என்று கேட்கத் தோன்றும்.



சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நடந்த ஈஷா அறக்கட்டளை வெள்ளி விழா, கிராமோத்சவம், இரண்டரை கோடி மரங்கள் நடும் விழாவில் 'நாகலிங்க மரத்தை' நடும் முதல்வர் கருணாநிதி. உடன் (இடமிருந்து) ஈஷா அறக்கட்டளை நிறுவனர் சத்குரு ஜக்கி வாசுதேவ், செய்தி, விளம்பரத்துறை அமைச்சர் பரிதி இளம்வழுதி, முதல்வரின் மகளும், எம்பியுமான கனிமொழி.

மரங்களை நடுவதுடன் விடாமல், அதைப் பேணிப் பாதுகாக்கவும் வேண்டும். அத்தகைய பணிகளை அரசு மட்டுமே செய்துவிட முடியாது. அனைவரும் சேர்ந்தால்தான் செயல்படுத்த முடியும்.

**விளம்பரப் பலகைகள்:** தில்லியும் பெங்களூரும் மரங்கள் நிறைந்த நகர்களாக பெயர் பெற்றுள்ளன. ஆனால், அதைப் போல் சென்னையைக் கூற முடியாது.

காரணம், சாலையோரம் மரங்களை மறைத்துக் கொண்டு, அரசியல் கட்சிகள் உள்பட விளம்பரப் பலகைகள் நாள், மாதம் என்றில்லாமல், ஆண்டுக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளன. இதனால், மரங்கள் வளர வழியே இல்லை.

இது குறித்து அரசு மட்டும் கவலைப்பட்டுப் பயனில்லை. அதிகாரிகள், ஊழியர்கள் மட்டுமின்றி, விளம்பர போர்டுகளை அகற்றினால் நீதிமன்றத்தில் தடை பெறுவோரும் கவலைப்பட வேண்டும். தடையுத்தரவு வழங்கும் நீதிபதிகளும் கவலைப்பட வேண்டும்.

அப்போதுதான் மரங்கள் காக்கப்படும். சென்னை போன்ற நகர மக்கள் ஆரோக்கியமான, நிம்மதியான சுகமான வாழ்க்கை வாழ முடியும் என்றார் கருணாநிதி.

**பத்திரிகை:** ஈஷா அறக்கட்டளை தொடங்கியுள்ள 'காட்டுப்பூ' என்ற மாதாந்திரப் பத்திரிகையை மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் கனிமொழி வெளியிட பாடகி சுதா ரகுநாதன் பெற்றுக் கொண்டார்.

ஈஷா அறக்கட்டளையின் 'பசுமைத் திட்டத்தை' தொடங்கி வைத்து **கனிமொழி** பேசியதாவது:

மதத் தலைவர்கள் சமூக மேம்பாட்டுக்காகப் பாடுபடுவது பாராட்டுக்குரியது. ஏசுநாதர், முகமது நபி, விவேகானந்தர், ராமானுஜர், ஜே.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் மதத்தில் நிறைந்துள்ள மூட நம்பிக்கைகளை எதிர்த்துப் போராடினர்.

மதம் என்பது மனிதர்களை மேம்படுத்துவதற்காக உருவானது. மனிதர்களைக் கூறுபோடவோ போராட்டக் களங்களை உருவாக்கவோ ஏற்படுத்தப்பட்டது அல்ல.

இந்த உலகத்தை எதிர்கால சந்ததிக்கு பாதுகாப்பாக விட்டுச் செல்ல வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. அதற்கு மரங்களை வளர்க்க வேண்டியது மிக அவசியம் என்றார் கனிமொழி.

சி.பி.ஐ. முன்னாள் இயக்குநர் **டி.ஆர். கார்த்திகேயன்:** நாட்டின் மேம்பாடு கிராமப்புறங்களில் அமைந்துள்ளது. கிராமங்களின் மேம்பாடு விவசாயிகளின் நலனில் அமைந்துள்ளது. தமிழகத்தில் விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்டு அரசு பயிர்க் கடன்களைத் தள்ளுபடி செய்தது. அதைப் போல், மத்திய அரசும் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும். இடுபொருள் விலைச் சுமையைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு முதல்வர் தனது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும்.

முன்னதாக, விழாவின் நோக்கத்தை எழுத்தாளர் முத்தையா விவரித்தார். பாடகி சுதா ரகுநாதன் வரவேற்றார். நிறைவாக ஜக்கி வாசுதேவ் அருளுரை வழங்கினார்.

Dinamalar 24 Sep 2007





'ஈஷா யோகா' மையத்தின் கிராமோத்சவம் மற்றும் வெள்ளி விழா சென்னை, அண்ணா பல்கலைக்கழக மைதானத்தில் நடந்தது. 'ஈஷா' அறக்கட்டளை நிறுவனர் சத்குரு ஜக்கி வாசுதேவ் முன்னிலையில் தமிழகத்தில் இரண்டரை கோடி மரங்கள் நடும் 'பசுமைக்கரங்கள்' திட்டத்தை தமிழக முதல்வர் கருணாநிதி, கனிமொழி எம்.பி., ஆகியோர் முதல் மரக்கன்றை நட்டு துவக்கி வைத்தனர். அடுத்த படம்: விழாவையொட்டி நடந்த கிராமப்புற கலைநிகழ்ச்சியில் கோலாட்டம் ஆடி அசத்திய கலைஞர்கள்.

# விளம்பர போர்டுகளால் சூழ்ந்த சென்னையை மரங்கள் சூழ்ந்த மாநகரமாக மாற்றுவோம்

## முதல்வர் கருணாநிதி உறுதி

சென்னை, செப். 24-

'சென்னையை மரங்கள் சூழ்ந்த நகரமாக மாற்ற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்' என முதல்வர் கருணாநிதி பேசினார்.

ஈஷா யோக மையத்தின் சார்பில் ஈஷா கிராமோத்சவம் மற்றும் ஈஷா யோகா மையத்தின் வெள்ளிவிழா சென்னை அண்ணா பல்கலைக் கழக மைதானத்தில் நேற்று நடந்தது. ஈஷா அறக்கட்டளை நிறுவனர் சத்குரு ஜக்கி வாசுதேவ் முன்னிலையில் நடந்த விழாவில் தமிழகத்தில் இரண்டரை கோடி மரங்கள் நடும் 'பசுமைக்கரங்கள்' திட்டத்தை முதல்வர் கருணாநிதி மற்றும் ராஜ்யசபா எம்.பி., கனிமொழி ஆகியோர் முதல் மரத்தை நட்டு துவக்கி வைத்தனர். 'ஈஷா காட்டுப்பூ' தமிழ் மாத இதழை கனிமொழி எம்.பி., வெளியிட, கர்நாடக இசைக் கலைஞர் சுதா ரகுநாதன் பெற்றுக் கொண்டார். ஆண்களுக்கான கைப்பந்து போட்டியில் முதல் பரிசு பெற்ற கடலூரார் சங்கொலி குப்பம் கிராம அணிக்கும், பெண்கள் எரிபந்து போட்டியில் முதல் பரிசு பெற்ற கோவை தேவராயபுரம் கிராம அணிக்கும் முதல்வர் கருணாநிதி கேடயம் வழங்கினார்.

விழாவில் முதல்வர் கருணாநிதி பேசியதாவது:

குன்றக்குடி அடிகளார் மீதும், இளைய தம்பிரான் அடிகளார் மீதும் அவர்கள் தமிழை வளர்த்ததற்காக மிகுந்த அன்பு வைத்திருந்தேன். சத்குரு மரம் வளர்க்கிறார் என்பதால் அவர் மீது அன்பு வைத்திருக்கிறேன். துறவிகள் எல்லாம் இவரைப்போல இருந்தால் நாடு எப்படி என்று எண்ணிப்பார்த்து பெருமூச்சு விடுகிறேன். அந்த பெருமூச்சு மதத்தை வளர்க்காமல், மரங்களை வளர்த்தால் நாடு வளம் பெறும். தலையை, கை, காலை வெட்டச் சொல்லும் துறவிகள் மீது எனக்கு நம்பிக்கை இல்லை.

டில்லி, பெங்களூரு ஆகிய நகரங்கள் மரங்கள் நிறைந்த ஊர்களாக உள்ளன. சென்னை நகரத்தை அதைப்போல புகழ முடியவில்லை. சென்னையில் விளம்பர பேனர்களை தான் பார்க்க முடிகிறது. கோபுர உயரத்திற்கு பட விளம்பரங்கள், அரசியல் விளம்பரங்கள் வாரக்கணக்கில், மாதக்கணக்கில், வருடக்கணக்கில் வைக்கப்படுகின்றன.

சென்னையை மரங்கள் சூழ்ந்த நகரமாக மாற்ற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். அதிகாரிகளும், ஊழியர்களும், போர்டுகளை அகற்றக்கூடாது என்று 'ஸ்டே' வாங்குபவர்களும், 'ஸ்டே' கொடுக்கும் நீதிமன்றங்களும் சென்னையில் மரங்களை வளர்க்க வேண்டும் என கவலைப்பட வேண்டும். எல்லாரும் கவலைப்பட்டால் தான் மரங்களை வளர்க்க முடியும். மரங்களை வளர்த்து, அவற்றை வாழ வைக்க வேண்டும். அப்போது தான் மரங்கள் நம்மை வாழ வைக்கும்.

இவ்வாறு கருணாநிதி பேசினார்.

சி.பி.ஐ., முன்னாள் இயக்குனர் கார்த்திகேயன் பேசுகையில், 'விவசாயிகளுக்கு நிரந்தர தீர்வு கிடைக்க முதல்வர் கருணாநிதி இந்திய அரசை வலியுறுத்தி பயிர் காப்பீடு மற்றும் விலைபொருட்களுக்கு தகுந்த விலை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்' என்றார்.

ராஜ்யசபா எம்.பி., கனிமொழி பேசுகையில், 'உலகம் இன்று வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு சொந்தமானது அல்ல. எதிர்கால சந்ததியினருக்கு சொந்தமானது. பூமியை நாசம் செய்யாமல், அதன் இயற்கை வளங்களை சுரண்டாமல், எதிர்கால சந்ததியினருக்கு கொடுக்க வேண்டும்' என்றார். நிகழ்ச்சியை தொடர்ந்து சத்குரு ஜக்கி வாசுதேவின் மகா சத்சங்கம் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

போராட்டம்: நிகழ்ச்சிக்கு முன்னதாக முதல்வர் கருணாநிதி நிருபர்களிடம் கூறுகையில், 'இனிமேல் ஆர்ப்பாட்டங்கள் ஏதாவது நடைபெற்றால், அது சேதுசமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தி தான் இருக்கும். பாரதிய ஜனதா கட்சிக்கு எதிராக இருக்காது' என்றார்.

Tamil Murasu 24 Sep 2007





ஈஷா யோகா மையத்தின் 25-ம் ஆண்டு விழாவை முன்னிட்டு, 'ஈஷா கிராமோத்சவம்' என்ற பெயரில், 2.5 கோடி மரங்கள் நடும் திட்டத் தொடக்க விழா, சென்னை அண்ணா பல்கலைக் கழக மைதானத்தில் நேற்று நடந்தது. விழாவில் பங்கேற்ற முதல்வர் கருணாநிதி, சத்குரு ஜகி வாசுதேவ்.

# என்னை கவர்ந்த துறவிகள்

## ஈஷா மைய விழாவில் கருணாநிதி பேச்சு

சென்னை, செப்.24- தமிழ்ப் பற்றுக் கொண்டிருந்ததால், இந்து மதத்தின் பெரும் துறவியாக கருதப்படுகிற மறைந்த குன்றக்குடி அடிகளார் மீது எனக்கு மிகுந்த அன்பு உண்டு. அதுபோலவே மனிதர்களுக்கு தேவையான மரம் வளர்க்கிறார் என்பதால் சத்குரு ஜகி வாசுதேவ் மீதும் அன்பு உண்டு என்று முதல்வர் கருணாநிதி கூறினார்.

ஈஷா யோகா மையத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு, 'ஈஷா கிராமோத்சவம்' நிகழ்ச்சி, அண்ணாப் பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று நடந்தது. கனிமொழி எம்.பி. கலந்து கொண்டு, இரண்டரை கோடி மரங்கள் நடுவதற்கான பசுமைக் கரங்கள் திட்டத்தை தொடங்கி வைத்தார். முதல்வர் கருணாநிதி மரக்கன்று நட்டார். பின்னர், அவர் பேசியதாவது:

சத்குரு மக்களிடம் எடுத்து வைக்கும் வாதங்களும், அருள்மொழிகளும் பட்டி, தொட்டிகளில் உள்ள மக்களையும் கவர்ந்துள்ளதை உணரமுடிகிறது. எத்தனையோ துறவிகள் இருக்கிறார்கள். இப்படி ஒரு துறவி இருந்தால், இந்த நாடு என்ன, எந்த நாடும் பெரிய அளவில் வளர்ந்திருக்கும் என்று நினைத்து பெருமூச்சு விடுகிறேன். இந்து மதத்தின் பெரும் துறவியான குன்றக்குடி அடிகளாரிடம் எனக்கு அன்பு உண்டு. அதற்கு காரணம், அவர் தமிழை வளர்த்தார். இப்போது இளைய மடாதிபதியாக இருக்கும் குன்றக்குடி அடிகளாரும் தமிழை வளர்ப்பதால் அவருடனும் எனக்கு தொடர்பு உண்டு.

சத்குரு, மதத்தை வளர்க்கவில்லை. மரத்தை வளர்ப்பதால் அவருடன் அன்பு உண்டு. மதத்தை வளர்த்தால், தலையை கொண்டுவா, கையை கொண்டுவா, நாக்கை கொண்டுவா என்றுதான் சொல்லத் தோன்றும். மரத்தை வளர்த்தால் மக்களை வாழ வைக்க பயன்படும் என்ற நல்லுரையை அவர்களுக்கு வழங்கிட முடியும். அதைத்தான் சத்குரு செய்கிறார்.

இவரா இவ்வளவு பெரிய கூட்டத்தை கூட்டி இருக்கிறார் என்று மலைத்து போகிறேன். மனம் மகிழ்கிறேன்.

டெல்லி, பெங்களூரில் சாலையோரத்தில் மரங்கள் இருப்பதை போல சென்னையும் என்று என்னால் சொல்ல முடியவில்லை. மரங்களுக்கு பதிலாக பெரிய பேனர்கள், பட விளம்பரங்கள், அரசு விளம்பரங்கள் என்று வைக்கிறோம். இது வாரக் கணக்கில், மாதக் கணக்கில், ஆண்டு முழுவதும் வைக்கிறோம். இதனால், மரங்கள் வளர்வதற்கு வழியில்லை. மரம் வளரும் தன்மையும் பறிக்கப்படுகிறது. எதிர்காலத்தில் சென்னை மாநகரத்தில் மரங்கள் இருக்க வேண்டும். இதற்கு நான் மட்டும் கவலைப்பட்டால் போதாது. அதிகாரிகள் கவலைப்பட்டால் போதாது. சிப்பந்திகள் கவலைப்பட வேண்டும். விளம்பரப் போர்டு வைப்பவர்கள் கவலைப்பட வேண்டும். அதை அகற்றாமல் நீதிமன்றத் தடையாணை வாங்க செல்பவர்கள் கவலைப்பட வேண்டும். தடையாணை அளிக்கும் நீதிமன்றங்கள் கவலைப்பட வேண்டும். மரங்கள் வளர்ந்தால்தான் மனிதர்கள் வாழமுடியும்.

இவ்வாறு முதல்வர் கருணாநிதி பேசினார்.



ஈசா அமைப்பு சார்பில் நடந்த விழாவில் முதல்-அமைச்சர் கருணாநிதி பேசிய போது எடுத்தபடம். அருகில் ஈசா மைய தலைவர் ஜகி வாசுதேவ், கனிமொழி எம்.பி., சி.பி.ஐ. முன்னாள் அதிகாரி கார்த்திகேயன், ஆகியோர் உள்ளனர்.



விழாவுக்கு வந்திருந்த கூட்டத்தின் ஒரு பகுதியை படத்தில் காணலாம்.

### இரண்டரை கோடி மரக்கன்றுகள் நடுகிறார்கள்:

# ஜகிவாசுதேவ் திட்டத்தை கருணாநிதி தொடங்கி வைத்தார்!

## "மனித உயிர்கள் ஆரோக்கியமாக வாழ மரங்களை பாதுகாப்போம்"!!

சென்னை, செப். 24- இரண்டரை கோடி மரக்கன்றுகள் நடும் ஜகி வாசுதேவ் சுவாமிகளின் திட்டத்தை முதல்-அமைச்சர் கருணாநிதி தொடங்கி வைத்தார். அவர் பேசுகையில், ''மனித உயிர்கள் ஆரோக்கியமாக வாழ மரங்களை அனைவரும் பாதுகாக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

சென்னையில் உள்ள அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் ஈ.சா கிராமோத்சவம் அமைப்பின் பசுமை திட்டம் சார்பில் இரண்டரை கோடி மரக்கன்றுகள் நடும் திட்டத்தின் தொடக்க விழா நேற்று நடைபெற்றது. முதல் -அமைச்சர் கருணாநிதி விழாவுக்கு தலைமை தாங்கினார். ஒரு மரக்கன்றை நட்டு திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சிக்கு ஈ.சா.மைய தலைவர் ஜகிவாசுதேவ் சுவாமிகள் முன்னிலை வகித்தார்.

விழாவில் கருணாநிதி பேசியதாவது:-

**மதம் வேண்டாம்**

**மரம் வேண்டும்**

நான் துறவிகளிடம் கொண்டுள்ள பற்று, பாசம் எத்தகையது என்பதையும், எப்படிப்பட்ட துறவிகளிடத்திலே பற்றும் பாசமும் கொண்டிருப்பேன் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். உதாரணமாகச் சொல்ல வேண்டுமேயானால், நான் இந்து மதத்திலே பெரும் துறவியாகக் கருதப்படுகின்ற மறைந்த குன்றக்குடி அடிகளார் இடத்தில் எனக்கு மிகுந்த அன்பு உண்டு. காரணம், அவரிடத்திலே குடி கொண்டிருந்த தமிழ் மீது - இப்போது இளைய தம்பிரான், இளைய மடாதிபதி குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரிடமும் அதே அன்பு தொடருகிறது. காரணம் அவர் தமிழ் வளர்ப்பதால், நம்முடைய சத்குருவிடம் அன்பு பெருகக் காரணம், அவர் தமிழ் வளர்க்கிறார். இவர் மனிதர்களுக்குத் தேவையான மரம் வளர்க்கிறார் என்பது தான். மதத்தை வளர்க்காமல், மரத்தை வளர்ப்பவர்களை தான் பெரிதும் நம்புகிறவன்.

[illegible] வா, கையைக் கொண்டு வா, நாக்கைக் கொண்டு வா என்று சொல்லத் தோன்றும். மரத்தை வளர்த்தால் மக்களை வாழ வைக்க பயன்படும் என்ற நல்லுரையை அவர்களுக்கு வழங்கிட முடியும். அதைத் தான் நம்முடைய சத்குரு செய்கிறார்.

மரத்தை ஏன் வளர்க்க வேண்டும்? இது இன்றைக்கு மக்களிடத்தில் ஒரு ஸ்லோகம் என்று வட மொழியில் சொல்வார்களே, அதைப் போல ஒரு பொன்மொழியாகவே ஆகி விட்டிருக்கிறது. ஒரு அறிவுரையாகவே ஆகி விட்டிருக்கிறது. அந்த அறிவுரையைப் பின்பற்றி நடக்க வேண்டும். அதை செய்கின்ற காரணத்தால் நான் மாத்திரமன்று, நாடு வாழ நலிவு நீர இன்றைக்கு சாதாரணமாகத் தோன்றுகின்ற ஒன்று, பிரமாண்டமான பயனை நாட்டிற்குத் தரும் என்ற அந்த எண்ணத்தை மெல்ல மெல்லத் தான் மக்களிடத்திலே பரப்ப முடிந்தது. அதை அரசின் சார்பாகத் தான் செய்ய வேண்டியிருந்தது. இன்றைக்கு துறவிகள் செய்கிறார்கள். முற்றும் துறந்தவர்கள் செய்கிறார்கள். வீட்டை மறந்தவர்கள் செய்கிறார்கள். ஆனால் அன்றைக்கு அரசு தான் இதைச் செய்ய முடிந்தது.

மன்னர் காலத்திலே கூட மரங்களை வளர்ப்பது சர்வ சாதாரணமாக இருந்திருக்கின்றது. மக்கள் ஆட்சிக் காலத்தில் அது மேலும் பெருகிட வேண்டும் என்ற எண்ணத்தினாலே தான் நமது இந்திய அரசு மரம் வளர்ப்பதற்கு ஒரு முக்கியத்துவத்தை தந்து மரவாரம் என்ற ஒரு வாரத்தையே உருவாக்கி அந்த வாரம் முழுவதும் மரம் நடுகின்ற வாரம் என்று அந்த வாரம் முழுவதும் கொண்டாடப்பட்டது.

''மரத்தை நாம் வளர்த்தால், மரம் நம்மை வளர்க்கும்'' என்று நான் ஒரு முறை சொன்னேன். ஒரு முறை சொல்லி அதையும் விளக்கியும் இருக்கிறேன். நாம் ஒரு மரத்தை வளர்த்தால், அந்த மரம் எப்படி நம்மை வளர்க்கும் என்றால், மரங்கள் பெருகி, அவை பெருங்காடாகி, அந்த மரங்களிலிருந்து வெளி வருகின்ற குளிர் காற்று, மேக மண்டலத்தை முத்தமிட்டு, அதன் காரணமாக மழை பொழிந்து, அந்த மழை பொழிந்த காரணத்தால் மாநதிகள் உருவாகி, மாநதிகளிலிருந்து வெள்ளம் வாய்க்கால் வழியோடி நம்முடைய வயல்களுக்கும் பாய்ந்து, கழனிகளிலே கதிர் குலுங்கி, அந்தக் கதிர்களிலே தோன்றுகின்ற நெல்மணிகளோ, கோதுமை மணிகளோ எந்த உணவு மணிகள் ஆயினும் அது நம்முடைய உயிரை வளர்க்கப் பயன்படுகின்றன. ஆகவே மழை தேவை என்றால் மரம் தேவை. மரத்திற்கும், மழைக்கும் என்ன தொடர்பு என்பதை இன்றைக்கு பால பாடத்திலேயே, இரண்டாவது மூன்றாவது படிக்கின்ற சிறுவர்களே கூட தெரிந்து கொள்ளக் கூடிய அளவிற்கு ஆசிரியர்கள் கற்றுத் தருகின்றார்கள். எனவே மரம் வளர்ப்பது சாதாரண விஷயமல்ல. அது ஒரு நாட்டின் உயிரை நீண்ட காலத்திற்கு வாழ வைக்கக்கூடிய, நீட்டிக்கக்கூடிய ஆற்றல் பெற்றது மரம் என்பதை யாரும் மறந்திடக்கூடாது. அதனால் தான் இதை அலட்சியப்படுத்தக் கூடாது என்று பெரியவர்கள் இதை இன்றைக்கு கையிலே எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**சென்னைக்கு**

**எழில் கூட்டுவோம்**

மரங்கள் நிறைந்த மாநகரம் என்று டெல்லிப் பட்டணத்தைச் சொல்கிறோம். அதைப் போல பெங்களூர் சென்றால், அங்கே சாலையோரங்களிலே நடுவீதிகளிலே இருக்கின்ற மரங்கள், அழகழகாக வளர்ந்திருக்கின்ற தருக்கள் இவைகளைக் கண்டு மரங்கள் அடர்ந்த ஊர் என்று பெங்களூரைப் புகழ்கிறோம். நான் வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். பெங்களூரைப் புகழ்வதைப் போலவோ, டெல்லி மாநகரத்தைப் புகழ்வதைப் போலவோ சென்னையைப் புகழ என்னால் முடியவில்லை. காரணம் அந்த அளவிற்கு ஒழுங்கான முறையிலே சென்னை மாநகரத்தின் வீதிகளை, சாலைகளை நாம் வைத்திருக்கவில்லை.

இங்கே சாலைகளிலே மரங்களுக்குப் பதிலாக பெரிய பெரிய பேனர்களை வைக்கிறோம். பெரிய பெரிய விளம்பரங்களை வைக்கிறோம். கோபுர உயரத்திற்கு இருக்கின்ற பட விளம்பரங்களை வைக்கிறோம். அரசியல் விளம்பரங்களை வைக்கிறோம். விளம்பரங்கள் வைப்பது பார்ப்பதற்காக, ஒரு நாள் இருநாள் என்றில்லாமல் வாரம் முழுவதும் வைக்கிறோம். மாதம் முழுவதும் வைக்கிறோம். ஏன் சில நேரங்களில் ஆண்டு முழுவதும் வைக்கிறோம். அப்படி வைக்கின்ற காரணத்தால், அந்த மரங்கள் வளருவதற்கும் அழியில்லாமல், மரங்கள் இருக்கிறதா இல்லையா என்று தெரிந்து கொள்வதற்கும் வழியில்லாமல் மரங்களால் ஒருநகரத்திற்கு ஏற்பட வேண்டிய எழில் குலுங்குகின்ற அந்தத் தன்மையும் இன்றைக்குப் பதிக்கப்பட்டுவிடுகிறது.

எனவே வெளியூர்களிலிருந்து வந்திருக்கின்ற இந்தப் பெரும் கூட்டத்தின் எதிரொலியாக சென்னை மாநகரம் இனி மேலாவது எழிலோடு விளங்க வேண்டும்மென்பதற்கு ஏற்ற வகையில் நான் மாத்திரமல்ல, நான் கவலைப்பட்டால் மாத்திரம் போதாது. என்னுடைய அதிகாரிகளும் கவலைப்பட வேண்டும். அதிகாரிகள் கவலைப்பட்டால் மாத்திரம் போதாது, சிப்பந்திகளும் கவலைப்பட வேண்டும்.

சிப்பந்திகள் கவலைப்பட்டால் மாத்திரம் போதாது. நாங்கள் இங்கே விளம்பர போர்டுகளை வைத்துதான் தீருவோம் என்று நீதிமன்றத்திற்கு சென்று ''தடையாணை'' வாங்குகிறார்களே சில பேர், அவர்களும் கவலைப்பட வேண்டும். ''தடையாணை'' வாங்குபவர்களும் கவலைப்பட வேண்டும், தடையாணையைக் கொடுக்கின்ற நீதிமன்றங்களும் கவலைப்பட வேண்டும். எல்லோரும் சேர்ந்து கவலைப்பட்டால் தான் மரங்களை வளர்க்க முடியும். மரங்கள் வளர்த்தால் தான் மனித உயிர்கள் வாழும், மனித உயிர்கள் ஆரோக்கியமாக வாழ நிம்மதியாக வாழ சுகமாக வாழ சுற்றுச் சூழ்நிலைப் பாதுகாத்துக் கொண்டு வாழ முடியும். எனவே மரங்களை வளர்ப்போம். மரங்களை நாம் வாழ வைப்போம். அப்போது தான் மரங்கள் நம்மை வாழ வைக்கும் என்ற அந்த உண்மையை உணருவோம், அனுபவரீதியாக உணர்வோம்.

இவ்வாறு அவர் பேசினார்



விழாவில் இரண்டரை கோடி மரங்கள் நடும் திட்டத்தை கருணாநிதி தொடங்கி வைத்தார். அருகில் கவிஞர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அமைச்சர் வேலு, சத்குருஜகி வாசுதேவ் சுவாமிகள் ஆகியோர் உள்ளனர்.

Makkal Kural 24 Sep 2007

## மதத்தை வளர்த்தால் தலையை கொண்டு வா, நாக்கை கொண்டு வா என்று தான் பேசத் தோன்றும்

# மதத்தை வளர்க்காதீர்கள்; மரத்தை வளருங்கள்: கருணாநிதி அறிவுரை

சென்னை, செப். 24-

மதத்தை வளர்த்தால் தலையை கொண்டு வா, நாக்கை கொண்டு வா என்று சொல்லத் தோன்றும். மதத்தை வளர்க்காமல் மரத்தை வளருங்கள் என்று முதலமைச்சர் கருணாநிதி கூறினார்.

சென்னையில் உள்ள அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் ஈசா கிராமோத்சவம் அமைப்பின் பசுமை திட்டம் சார்பில் இரண்டரை கோடி மரக் கன்றுகள் நடும் திட்டத்தின் தொடக்க விழா நேற்று நடைபெற்றது. விழாவுக்கு முதலமைச்சர் கருணாநிதி தலைமை தாங்கி மரக்கன்றை நட்டு திட்டத்தை தொடங்கிவைத்தார்.

இந்த விழாவுக்கு ஈசா மைய தலைவர் ஜகிவாசுதேவ் சுவாமி முன்னிலை வகித்தார்.

விழாவில் கருணாநிதி பேசியதாவது:-

நம்முடைய சத்குருவிடம் அன்பு பெருக காரணம் அவர் தமிழ் வளர்க்கிறார்கள், இவர் மனிதர்களுக்கு தேவையான மரம் வளர்க்கிறார் என்பது தான். மதத்தை வளர்க்காமல், மரத்தை வளர்ப்பவர்களை நான் பெரிதும் நம்புகிறவன்.

மதத்தை வளர்த்தால் தலையை கொண்டு வா, கையை கொண்டு வா, நாக்கை கொண்டு வா என்று சொல்லத் தோன்றும். மரத்தை வளர்த்தால் மக்களை வாழவைக்க பயன்படும் என்ற நல்லுரையை அவர்களுக்கு வழங்கிட முடியும். அதைத்தான் நம்முடைய சத்குரு செய்கிறார்.

### சாலைகள் ஓரம் பேனர்கள்

சென்னை மாநகரத்தின் சாலைகளிலே மரங்களுக்கு பதிலாக பெரிய, பெரிய பேனர்களை வைக்கிறோம். பெரிய, பெரிய விளம்பரங்களை வைக்கிறோம். கோபுர உயரத்திற்கு இருக்கின்ற பட விளம்பரங் களை வைக்கின்றோம். மரங்கள் வளர்வதற்கு வழியில்லாமல், மரங்கள் இருக்கிறதா? இல்லையா? என்று தெரிந்து கொள்வதற்கும் வழியில்லாமல் மரங்களால் ஒரு நகரத்திற்கு ஏற்பட வேண்டிய எழில் குலுங்குகின்ற அந்த தன்மையும் இன்றைக்குப் பறிக்கப்பட்டு விடுகின்றது.

சென்னை மாநகரம் இனிமேலாவது எழிலோடு விளங்க வேண்டும் என்பதற்கு ஏற்ற வகையில் நான் கவலை பட்டால் மாத்திரம் போதாது. என்னுடைய அதிகாரிகளும் கவலைப்பட வேண்டும். அதிகாரிகள் கவலைப்பட்டால் மாத்திரம் போதாது. சிப்பந்திகளும் கவலைப்பட வேண்டும். சிப்பந்திகள் கவலைப்பட்டால் மாத்திரம் போதாது, நாங்கள் இங்கே விளம்பர போர்டுகளை வைத்துத்தான் தீருவோம் என்று நீதிமன்றத்திற்கு சென்று தடையாணை வாங்குகிறார்களே சில பேர், அவர்களும் கவலைப்பட வேண்டும். தடையாணை வாங்குபவர்களும் கவலைப்பட வேண்டும். தடையாணை கொடுக்கின்ற நீதிமன்றங்களும் கவலைப்பட வேண்டும்.

எல்லோரும் சேர்ந்து கவலைப்பட்டால் தான் மரங்களை வளர்க்க முடியும். மரங்கள் வளர்ந்தால் தான் மனித உயிர்கள் வாழும், மனித உயிர்கள் ஆரோக்கியமாக வாழ, நிம்மதியாக வாழ, சுகமாக வாழ, சுற்றுச்சூழலை பாதுகாத்துக் கொண்டு வாழ முடியும்.

இவ்வாறு முதலமைச்சர் கருணாநிதி பேசினார்.

முன்னதாக கைப்பந்து போட்டியில் வெற்றி பெற்ற கடலூர் மாவட்டம் சங்கொலிக்குப்பம் குழுவினருக்கு கருணாநிதி பரிசு வழங்கினார். மேலும், எறிபந்து போட்டியில் வெற்றி பெற்ற தேவராயபுரம் குழுவினருக்கு பரிசு வழங்கினார்.

விழாவில் 'ஈசா காட்டுப்பூ' என்ற தமிழ் மாத இதழை கனிமொழி கருணாநிதி எம்.பி. வெளியிட்டார். அதை பாடகி சுதா ரகுநாதன் பெற்றுக் கொண்டார். விழாவில் முன்னாள் சி.பி.ஐ. இயக்குனர் டி.ஆர். கார்த்திகேயன், முத்தையா உள்பட பலர் பேசினார்கள்.

கோக்கோ கோலா பொது மேலாளர் சிவகுமார் மற்றும் ஜேக்ரோச் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

சென்னை 24.9.2007



ஈஷா கிராமோத்ஷவம் சார்பாக சென்னையில் நடைபெற்ற பசுமை கரங்கள் மரக்கன்று நடும் திட்ட விழாவில் கலந்து கொண்ட முதலமைச்சர் கருணாநிதிக்கு சத்குரு ஜக்கி வாசுதேவ் நினைவு பரிசு வழங்குகிறார்.

### முதல்வர் துவக்கி வைத்தார்

# ஈஷா அமைப்பு சார்பில் மரம் வளர்ப்புத் திட்டம்

சென்னை, செப். 24:

ஈஷா கிராமோத்சவம் அமைப்பின் பசுமைத் திட்டம் சார்பில் 2.5 கோடி மரக்கன்றுகள் நடும் திட்டத்தினை முதல்வர் கருணாநிதி நேற்று தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் கருணாநிதி பேசுகையில், ஈஷா மைய தலைவர் சத்குரு ஜகி வாசுதேவ் தமிழ் வளர்ப்ப தாலும், மனிதர்களுக்குத் தேவையான மரம் வளர்ப்பதாலும், அவரிடம் பேரன்பு கொண்டிருப்பதாக கூறினார். மதம் வளர்க்காமல், மரம் வளருங்கள் என்றும் முதல்வர் குறிப்பிட்டார். சத்குரு ஜகிவாசுதேவ் முன்னிலை யில் நடந்த இந்த நிகழ்ச்சியில், விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு முதல்வர் பரிசுகளை வழங்கினார். 'ஈசா காட்டுப்பூ' என்ற தமிழ் மாத இதழை கனிமொழி எம்.பி. வெளியிட்டார். முதல் பிரதியை கர்நாடக பாடகி சுதா ரகுநாதன் பெற்றுக் கொண்டார்.

விழாவில், சி.பி.ஐ.முன்னாள் இயக்குனர் டி.ஆர்.கார்த்திகேயன், முத்தையா, கோக்கோ கோலா பொது மேலாளர் சிவகுமார், ஜேக்ரோச் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கலைஞர் டிவியை நடத்த அரசு பணமா?